**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**

**C.C.No.87 /2018**

2025ம் ஆண்டு மே மாதம் 27ம் நாள் செவ்வாய் கிழமை அரசு தரப்பு சாட்சி–1 திருமதி. என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ராஜா, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.கோவிந்தம்மாள் | வயது | : | 55 |
| த.பெ/ க.பெ. | : | ராஜேந்திரன் | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | LW1 / PW 1 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | : | | | | |

**(எதிரி ஆஜர் இல்லை, எதிரி தரப்பு வழக்கறிஞரால் ஆஜர் இல்லை )**

**முதல் விசாரணை:**

நான் வாழைக்குறிச்சியில் வசித்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும் அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். எனக்கும் எதிரி வீட்டிற்கும் பொய் பிரச்சனை காரணமாக முன் விரோதம் இருந்து வந்தது, பல வருடங்கள் ஆகி விட்டதாக எனக்கு தேதி மாதம் ஞாபகம் இல்லை. எனது ஆட்டுக்குட்டி அவர் வீட்டின் முன் சென்றதால் எதிரியின் மகன் ராஜீ என்பவர் அடித்து விட்டார் ஏன் அடித்தார் என்று கேட்டதற்கு என்னடி குச்சிகாரி தேவிடியா என்றும் உனது தாலியை அறுத்துவிடுவேன் என அசிங்கமாக திட்டினார். வடிவேலு ஒரு குச்சியை எடுத்து என் தலையில் அடித்தார், எனது இடது புற இடுப்பிலும் அடித்தார். **(அ.சா.1 அவரது காய தழும்பை நீதிமன்றத்தில் காண்பித்தார். )** பிறகு எனது கணவர்என்னை ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். பிறகு மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரிக்கு அனுப்பி வைத்தனர். ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் போலீசார் என்னிடம் இருந்து புகாரினை பெற்றுக்ககொண்டார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார்

வாக்குமூலத்தில் உள்ள கையெப்பம் என்னுடையதுதான். **அது அ.த.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** – எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை என்பதால் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

/உண்மை நகல் /
ஒம்/.திருமதி.எஸ்.தனலட்சுமி, பி.ஏ. எம்.எல்,
குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,(மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.